மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம் ,கோயமுத்தூர்

நாள் : 12-02-2025

அ.வ.எண் : 1148/2020

PW 2 – ராமசாமி த/பெ. ரங்கசாமி

<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் வாதி துரைச்சாமி கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகளை வழக்கறிஞர் சொன்னதன் பேரில் தான் தயார் செய்யப்பட்டது. நான் கே.என்.ஜி புதூரில் குடியிருந்து வருவதாக நிரூபண பிரமான பத்திரத்தில் சொல்லி உள்ளதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதார் அட்டை கொடுத்ததாக சாட்சியம் அளிக்கிறார் சாட்சி. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமான பத்திரத்தில் 1ம் பிரதிவாதி ஜெயபிரகாசை கடந்த 3 வருடங்களாக தெரியும் என்று நான் சொல்லி உள்ள விபரம் தவறு என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதி ஜெயபிரகாசை நான் பார்க்கவோ இல்லைஎ ன்று சொன்னால் சரியல்ல பாத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமான பத்திரத்தில் இறந்து போன 1ம் பிரதிவாதி ஜெயபிரகாஷ் எந்த தேதியில் கடன் வாங்கினார் என்று சொல்லி உள்ளேன் என்றால் 01-02-2019ம் கடன் வாங்கினார் என்று சொல்லி உள்ளேன். நான் டி.பி.எப் மில்லில் வேலை செய்து கொண்டிருந்தேன். 01-02-2019 சமயத்தில் நான் கூலி வேலைக்கு சென்று கொண்டிருந்தேன். நான் வாச்ட் மேனாக வேலை செய்து வருகிறேன் என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடையில் வைத்து வாங்கினார் என்று சொல்லி உள்ளேன். எந்த நேரம் என்று ஞாபகம் இல்லை. ஜெயபிரகாஷ், துரைச்சாமி, சண்முகம், ராமசாமி மற்றும் இன்னொரு துரைச்சாமியும் இருந்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமான பத்திரத்தில் இன்னொரு துரைச்சாமி இருந்தார் என்று சொல்லவில்லை என்றால் யாரும் என்னிடம் கேட்கவில்லை. அதனால் நான் சொல்லவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டில் முதல் சாட்சி கையெழுத்து

என்னுடையது தான். என்னுடைய முகவரியை தயாரித்து எழுதப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் வேறு வழக்குகளில் சொந்த வழக்குகளில் 30 வருடங்களுக்கு முன்பு சாட்சியம் அளித்துள்ளேன். தாவா புரோநோட்டை நான் எழுதி உள்ளதாக 2 முதல் 4 பிரதிவாதிகள் சொல்கிறார்கள் என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள சங்கதிகள் எழுதப்பட்டதும், 1ம் சாட்சி முகவரி எழுதிய கையெழுத்தும் ஒரே மாதியாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிராமிசரி நோட்டு எழுதிய கையெழுத்தும், ஆவணம் எழுதியதாக குறிப்பிடப்பட்டுள்ள சண்முகத்தின் கையெழுத்தும் வேறுபட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி நான் டெக்ஸ்டைல் மில்லில் வேலை செய்யும் போது மேல் அதிகாரியாக இருந்தார். 1ம் பிரதிவாதி வாதியிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த ஒரு பிராமிசரி நோட்டும் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே திருப்பி செலுத்திய கடனுக்காக கொடுத்த புரோநோட்டை போலியாக பூர்த்தி செய்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. போலியாக தயாரிக்கப்பட்ட புரோநோட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

//உண்மை நகல்//

ஒம்/–P.K. தமயந்தி,
மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,
கோயமுத்தூர்.